பதிவு எண் M. 4729

# தமிழ் ஹரிஜன்

தமிழ்ப்பண்ணை வெளியீடு: ஆசிரியர்கள் பொ. திருகூட சுந்தரம், நாமக்கல் கவிஞர்

ஸ்ரீ பியாரேலால்ஜீயால் நடத்தப்படும் காந்தியடிகளின் ஆங்கிலப் பத்திரிகையை அனுமதியுடன் தமிழாக்கியது.

20 ] சென்னை—ஞாயிறு, ஆகஸ்ட் 25, 1946. [ விலை. அணா. 2

## ராம நாமத்தைப் பற்றிய குழப்பம்

ஒரு நண்பர் எழுதுகிறார் :—

"ராம நாமத்தை உபயோகித்து மலேரியா ஜுரத்தைக் குணப்படுத்தலாம் என்று கூறுகிறீர்கள். ஆனால், உடம்பு சம்பந்தமான நோய்களை எப்படி ஆத்ம சக்தியைக் கொண்டு குணப்படுத்த முடியும் என்று எனக்கு விளங்கவில்லை. அத்துடன் நான் குணம் அடையத் தக்கவன் தானோ என்பதும், என்னுடைய தேசத்தார் இவ்வளவு அதிகமாகத் துன்பப் பட்டுக் கொண்டிருக்கும்போது எனக்கு விமோசனம் அருள வேண்டுமென்று பிரார்த்திக்க நியாய முண்டோ என்பதும் எனக்குச் சந்தேகமாய் இருக்கிறது. என்று நான் ராமநாமத்தைச் சரியாகத் தெரிந்து கொள்கிறேனோ அன்று அவர்களுடைய விமோசனத்திற்காகவும் நான் பிரார்த்தனை செய்வேன். இப்பொழுது செய்தால் ஏற்கனவே என்னிடமுள்ள சுயநலத்தைவிட அதிக சுயநலமுள்ளவனாகிவிடுவேன் என்று தோன்றுகிறது."

இந்தக் கடிதமெழுதிய நண்பர் உண்மையைக் காண்பதற்கு மனப்பூர்வமான ஆவலுடையவராகத் தோன்றுகிறார். இவரைப்போல் இன்னும் பலருக்கு இந்த விதமான சந்தேகம் தோன்றக் கூடுமாதலால் இந்த விஷயத்தைப் பற்றி இங்கே எழுதுகிறேன்.

மற்ற சக்திகளைப் போலவே ஆன்ம சக்தியும் மனிதனுக்குச்சேவைசெய்ய முடியும். அந்தச் சக்தியானது உடம்பிலுள்ள நோய்களைக் குணப்படுத்துவதற்கு ஆயிரக்கணக்கான வருஷங்களாக உபயோகப்படுத்தப்பட்டு வந்திருக்கிறது. அதைக் கொண்டு சரீர நோய்களை குணப்படுத்த முடியுமானால் அதை அப்படி உபயோகியாமல் இருப்பது குற்றமே யாகும். ஏனென்றால் மனிதன் ஜடப் பொருளும், ஆத்மாவும் சேர்ந்தவனே ஆவான். இவ்விரண்டும் ஒன்றையொன்றுஎப்பொழுதும் பாதித்துக்கொண்டே இருக்கின்றன. கோடிக்கணக்கான மக்களுக்கு மலேரியாவை குணப்படுத்தக் கொய்னா மருந்து கிடைக்கவில்லை என்பதற்காக நீங்கள் கொய்னா சாப்பிடாமல் இருக்கிறீர்களா? அப்படி யிருக்க கோடிக் கணக்கான மக்களுக்கு ராமநாமத்தைக் கொண்டு குணப்படுத்த தெரியாமல் இருக்கிறது என்பதற்காக நீங்கள் உங்களிடமுள்ள ராமநாம சிகிச்சையை உபயோகப்படுத்த ஏன் மறுக்க வேண்டும்? கோடிக் கணக்கான மக்கள், விஷயம் தெரியாமலோ, வேண்டுமென்றோ சுத்தமாகவும் சுகமாகவும் இல்லாமல் இருந்தால் அதற்காக ஏன் நீங்களும் சுத்தமாகவும் சுகமாகவும் இல்லாமல் இருக்க வேண்டும்? நீங்கள் பரோபகாரமென்று தவறாக எண்ணிக்கொண்டு சுத்தமாக இல்லாமல் இருந்தால் நீங்கள் அசுத்தமாயும் அசௌக்கியமாயும் இருப்பதன் மூலம் அதே கோடிக் கணக்கான மக்களுக்குச் செய்ய வேண்டிய சேவையைச் செய்யத் தவறியவர்கள் ஆவீர்கள். ஆன்ம விஷயத்தில் சுத்தமாயிருக்க மறுப்பது உடம்பு விஷயத்தில் சுத்தமா யிருக்க மறுப்பதைவிடப் பன்மடங்கு தீயது என்பதில் சந்தேகமில்லை.

விமோசனம் என்பது எல்லா விதத்திலும் சுத்தமாயும், சுகமாயும் இருப்பதைத் தவிர வேறெதுவுமன்று. நீங்கள் சுத்தமாயும், சுகமாயுமிருந்தால் அந்த மாதிரி இருப்பதற்கு நீங்கள் பிறருக்கு வழி காட்டுகிறீர்கள். அது ஒரு நன்மை. நீங்கள் சுத்தமாயும், சுகமாயும் இருப்பதால் மற்றவர்களுக்குப் பல விதத்திலும் சேவை செய்யக் கூடிய சக்தியுடையவர்களாய் இருக்கிறீர்கள். அது ஒரு நன்மை. இப்படி யிருக்க நீங்கள் ஏன் சுத்தமாயும், சுகமாயும் இருக்க மறுக்க வேண்டும்? ஆனால் பிறருக்குக் கிடைக்காதென்று நிச்சயமாகத் தெரிந்திருந்தும், நீங்கள் குணமடைவதற்காக பென்சிலின் என்னும் மருந்தை உண்பீர்களானால் நீங்கள் முற்றிலும் சுயநலம் உடையவர்களே.

இந்த நிருபருடைய வாதத்தில் காணப்படும் குழப்பம் இதுவாகும்.

ஆயினும் உண்மை யாதெனில் கொய்னா மாத்திரை சாப்பிடுவது, ராமநாமத்தை எப்படி உபயோகிப்பது என்று கற்றுக்கொள்வதைவிட மிகமிக எளிதாகும். கொய்னா மாத்திரையைக் கொஞ்சம் பணம் கொடுத்து வாங்கிவிடலாம். ஆனால் ராம நாமத்தை உபயோகிக்க அதிகமான சிரமத்தை மேற்கொள்ளவேண்டியது அவசியமாகும். இந்த நிருபர் ஜனங்களால் உபயோகிக்க முடியாதே என்று சொல்லிக்கொண்டு அவர் ராமநாமத்தை உபயோகிக்காமல் இருக்கிறார். ஆனால் அவர்களுக்காகவேனும் ராமநாமத்தை உபயோகிப்பதற்கான சிரமத்தை மேற்கொள்வது பயன் தரக்கூடியதேயாகும்.

சேவாகிராமம், — 9-8-46 — மோ. க. காந்தி.

## நிற்காது செல்க

இடையறாது எனக்கு ஏற்பட்டுள்ள சோர்வைக் குறித்து நான் எழுதியுள்ளதை வாசித்ததும் ஒரு நண்பர் கீழ்க்கண்ட பாடலை எனக்கு ஆறுதலாக அனுப்பியிருக்கிறார் :—

"வழியில் வெளிச்சம் குறைவாய் யிருக்கலாம். ஆயினும் நிற்காமல் தொடர்ந்து செல்க.

அதுதான் உன்னுடைய ஆன்மாவுக்காக ஏற்படுத்தப்பட்ட வழி.

அந்த வழி உன்னை இருட்டுக்கே இட்டுக்கொண்டு போனபோதிலும் சிருஷ்டி கர்த்தாவின் திவர்த்தியானது புதிய ஒளி தந்து வழியை விளக்கமாகக் காட்டி விடும்."

சேவா கிராமம் — 16-8-46 — மோ. க. காந்தி.

## வெறுங் கட்டடத்துக்குப் பிரசங்கம்

டௌன்ஸ் என்பவர் நல்ல கிறிஸ்து மத பக்தர். பல வருஷங்களுக்கு முன் நான் டர்பன் நகரத்திலிருந்த பொழுது என்னுடைய விருந்தாளியாக இருந்தார். ஒரு நாள் அவர் தம்முடைய பிரசங்கத்தைக் கேட்க விரும்புகிறவர்களிடம் எளிய வாழ்க்கையின் உயர்வைப் பற்றிப் பிரசங்கிக்க விரும்புவதாக என்னிடம் சொன்னார். மெர்க்குரிலேன் என்னும் தெருவில் ஒரு கிறிஸ்தவக் கோயிலைச் சேர்ந்த ஒரு மண்டபத்தை ஒரு மணி நேரத்திற்கு இரவலாக வாங்கிக் கொண்டு என்னைத் தலைமைவகிக்கும்படி கேட்டுக்கொண்டார். இது நடந்தது 1894-ம் வருஷத்தில். "நான் தென் ஆப்பிரிக்காவிற்கு வந்து கொஞ்ச காலந்தான் ஆகிறது. ஆகையால் நான் தலைமை வகித்தால் ஜனங்கள் வரமாட்டார்கள்" என்று அவருக்கு எச்சரிக்கை கூறினேன். ஆனால் அவர் அதைக் கொஞ்சமும் பொருட்படுத்தவில்லை. குறிப்பிட்ட நேரத்தில் டௌன்ஸ் பிரசங்கம் செய்ய ஆரம்பித்தார். அப்பொழுது அவருடைய பிரசங்கத்தைக் கேட்க என்னைத் தவிர வேறு யாரும் கிடையாது. ஜனங்கள் வரட்டும். கொஞ்ச நேரம் பொறுத்திருங்கள் என்று நான் கூறிப் பார்த்தேன். ஆனால் அவர் கேட்கவில்லை. கடவுளுடைய நேரத்தைத் திருடமாட்டேன் என்று சொல்லிக் கொண்டு ஜனங்கள் வரவில்லையே என்பதற்காகக் கொஞ்சமும் வருத்தப்படாமல் தம்முடைய பிரசங்கத்தைச் செய்து கொண்டிருந்தார். அப்படிச் பிரசங்கிக்கும் பொழுது 10 பேர் போல வந்து கொண்டும் போய்க் கொண்டும் இருந்தார்கள். நான் டில்லியிலிருந்த பொழுது இந்த விஷயத்தை ஹொரேஸ் அலக்ஸாண்டரிடம் சொன்னேன். அவர் ஸ்டீபன் கிரல்லட் என்னும் மதப் பிரசாரகர் யாருமில்லாமலே வெறுங் கட்டடத்தில் பிரசங்கம் செய்த விநோதமான கதையை என்னிடம் சொன்னார். அப்படிப் பிரசங்கம் செய்ய வேண்டுமானால் அவருக்குக் கடவுளிடம் பரிபூரணமான நம்பிக்கை இருந்திருக்க வேண்டும். ஆதலால் அந்தக் கதையை ஹரிஜன் வாசகர்களுடைய நன்மைக்காக எழுதி அனுப்பும்படி அவரிடம் கேட்டுக் கொண்டேன். அவர் அனுப்பியுள்ள கதை வருமாறு :—

கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்தவர்களில் க்வேக்கர் என்று ஒரு வகுப்பார் உளர், அவர்கள் கிறிஸ்துவின் போதனைப்படி அணுவளவும் பிசகாமல் நடக்க முயல்பவர்கள். அந்த வகுப்பைச் சேர்ந்தவர் ஸ்டீபன் கிரல்லெட் என்பவர். அவர் 19-ம் நூற்றாண்டின் முதற் பகுதியில் இருந்தவர். நாடெங்கும் தெரிந்த நல்ல பிரசங்கி. அவருடைய மூதாதையர் பிரான்ஸ் தேசத்திலிருந்து வந்தவர்கள். அவர் கொஞ்ச காலம் லண்டனில் வசித்து விட்டு அமெரிக்காவில் குடியேறினார். கடைசிக் காலத்தில் அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் மத போதனை செய்யும் பொருட்டுப் பல இடங்களுக்குப் பிரயாணம் செய்தார். இங்கே கூறப்போகும் சம்பவம் அவருடைய தினசரிக் குறிப்புப் புத்தகத்தில் காணப்படவில்லை. ஆனால் அது உண்மையான சம்பவம் என்று அவருடைய குமாரி உறுதி கூறுகிறாள். சமீபத்தில் அவருடைய ஜீவிய சரித்திரத்தை எழுதிய கம்பர்ட் என்பவர் அதை உண்மை என்று ஒப்புக் கொண்டிருக்கிறார்.

ஆனால் அது எந்த வருஷத்தில் நடந்தது என்று நிச்சயமாகச் சொல்ல முடியவில்லை.

கடவுளுடைய சித்தத்தை அறிவதற்காக ஸ்டீபன் கிரல்லெட் காத்துக்கொண்டிருந்தார். அமெரிக்கக் காடுகளுக்குள் நீண்ட தூரம் பிரயாணம் செய்து அங்கே மரம் வெட்டிக்கொண்டிருக்கும் விறகு வெட்டிகளுக்கு மத போதனை செய்யும்படி அவருடைய அந்தராத்மா ஆணையிட்டது. எங்கே போக வேண்டுமென்று தெரிய விரும்பினார். முன்னே போயிருந்ததும் இப்பொழுது மறந்து போனதுமான ஒரு காட்டை நினைத்துக் கொண்டார். அவருடைய மனத்தில் ஏதோ ஒன்று "மறுபடியும் அங்கே போய் அங்கே தனிமையாய் இருக்கும் அந்த மனிதர்களுக்கு ஆண்டவனைப்பற்றி கூறும்" என்று சொல்லிற்று. அதன் குரல் அவருடைய காதுக்கு மட்டுமே வெகு தெளிவாகக் கேட்டது. அப்படியே அவர் தம்முடைய வீட்டையும், மனைவியையும் விட்டுவிட்டு அந்தக் காட்டிற்குப் புறப்பட்டார். அவர் போகும்பொழுது அவருடைய மனம் ஆனந்த வெள்ளத்தில் திளைக்கலாயிற்று. கடைசியில், குறிப்பிட்ட இடத்தைச் சமீபித்தபொழுது அவருடைய மனத்தில் ஒரு பக்கம் சந்தோஷமும் ஒரு பக்கம் தயக்கமும் உண்டாயின. ஆனால் அந்த இடத்தில் போய்ச் சேர்ந்தபொழுது அது நிசப்தமாயும் நிர்மானுஷ்யமாயும் இருந்தது. அங்கே இருந்த ஒரு பெரிய மரத்தாலாய குடிசை பல நாட்களாக உபயோகப்படுத்தப்படாமல் கிடப்பதுபோல் தோன்றிற்று. விறகு வெட்டிகள் வேறு காடுகளுக்குச் சென்றிருந்தார்கள். இன்னும் பல வாரங்கள் வரைத் திரும்பி வரமாட்டார்கள். அப்பொழுது ஸ்டீபன் கிரல்லெட் "நான் என்ன, அந்தக் குரல் கூறியதைத் தவறாக அர்த்தம் செய்துவிட்டேனா" என்று எண்ணினார். அப்படியில்லை என்று தீர்மானித்துக் கொண்டார். இனி என்ன செய்வதென்று யோசித்தார். மௌனமாகக் கடவுளிடம் பிரார்த்தனை செய்தார். அப்பொழுது "உம்முடைய பிரார்த்தனையைக் கூறும், அது உம்முடையதன்று, என்னுடையதே ஆகும்" என்று அந்தக் காட்டின் நிசப்தம் அவருக்குக் கூறிற்று. அப்படியே அவர் அந்தக் குடிசைக்குள் சென்று அறையின் கோடியில் நின்றுகொண்டு 200 பேர் ஆவலாகக் கேட்டுக்கொண்டிருந்தால் எப்படி பிரசங்கிப்பாரோ அப்படியே பிரசங்கிக்க ஆரம்பித்தார். தம்முடைய வாழ்நாளில் இவ்வளவு அழகாக இதுவரை பிரசங்கித்ததில்லை என்று அவருக்குத் தோன்றிற்று. கடவுளுடைய அன்புதான் உலகத்தில் உயர்ந்த விஷயம் என்பதைப்பற்றியும் எப்படிப் பாவமானது மனிதனை கடவுளிடம் அணுகவொட்டாமல் தடுக்கிறது என்பதைப்பற்றியும் மக்களுடன் வாழ்வதற்காக அவதரித்த ஏசுகிறிஸ்துவின் மூலம் அந்தத் தடையை எப்படி நீக்கிக் கொள்ளலாம் என்பதைப் பற்றியும் பேசினார். அங்கு வாழ்ந்திருந்த முரட்டு மனிதராகிய விறகுவெட்டிகளை நினைந்து கொண்டு அவர்கள் ஒவ்வொருவரிடமும் அன்பு செலுத்தினார். தம்முடைய அன்பு இவ்வளவானால் ஆண்டவனுடைய அன்பு எவ்வளவு அதிகமாயிருக்குமென்று எண்ணினார். அவர்களுக்காகச் சத்தம் போட்டு பிரார்த்தனை செய்தார். இறுதியில் களைப்புற்றுச் சோர்ந்து போய் கீழே உட்கார்ந்து தம்முடைய கைகளில் முகத்தை வைத்துக்கொண்டார். வெகு நேரம் சென்றது. அப்பொழுது யாரும் வரவில்லை. ஒரு சிறு பாத்திரத்தைமட்டும் பார்த்தார். தம்மைர் கேலி செய்வதற்காக வைத்திருப்பது போல் அவருக்குத் தோன்றிற்று. அதைக் காண வெறுப்பாக இருந்தது. பிரான்ஸ் தேசத்தில் லிமோஜீஸ் என்னும் நகரத்திலுள்ள தம்முடைய தந்தையின் மாளிகையிலுள்ள அழகான பாத்திரங்கள் ஞாபகத்திற்கு வந்தன. ஏன் அந்த அழகையும் ஆடம்பரத்தையும் துறந்து விட்டு இந்த மாதிரி முட்டாள் தனமான பிரயாணங்கள் செய்யவும் கிழிப்போன பாத்திரத்திற்கு உபதேசம் செய்யவும் புறப்பட்டேன் என்று எண்ணினார். இந்த எண்ணத்தோடு போராடி அதை வென்றார். பாத்திரத்தை எடுத்து பக்கத்திலுள்ள ஓடையில் சுத்தமாகக் கழுவி ஜலம் மொண்டு குடித்தார். தாம் கொண்டு வந்திருந்த உலர்ந்துபோன ரொட்டியை உண்டார். தம்முடைய உயிரைக் காப்பாற்றும் ஆவ் ஒன்று

அங்கே இருப்பதாக எண்ணினார். அதனால் தைரியம் கொண்டார். அது தம்மோடு துணை வருவதாக எண்ணிக்கொண்டு கனவில் நடக்கும் மனிதனைப் போல் வீட்டுக்குச் சவாரி செய்து போனார்.

பல வருஷங்களுக்குப்பின் ஒரு சமயம் லண்டன் பாலத்தை கடந்து கொண்டிருந்தார். அப்பொழுது அதில் ஜனங்கள் கூட்டமாகப் போய் கொண்டிருந்தார்கள். திடீரென்று ஒருவர் அவருடைய கையைப் பிடித்துக்கொண்டு "இதோ இருக்கிறீரே, இப்பொழுதேனும் உம்மைக் கண்டு விட்டேனே" என்று கனத்த குரலில் சொன்னார்.

ஸ்டீபன் கிரலெட் :—

நண்பரே! யாரையோ நினைத்துக் கொண்டு சொல்லுகிறீர். உம்மை எனக்குத் தெரியாதே.

அந்த மனிதர் :—

நான் தவறு செய்ய வில்லை; எந்த நேரமும் ஒருவரைத் தேடிக் கொண்டிருக்கிறவர் இறுதியில் அவரைக் காணும் பொழுது அவர் எப்படித் தவறு செய்வார்?

அதன் பிறகு, பக்கத்தில் ஜனங்கள் போவதையும் லட்சியம் செய்யாமல் அந்த மனிதர் உரத்த குரலில் தம்முடைய கதையைச் சொன்னா. ஸ்டீபன் கிரலெட் வெறுங் கடட்டத்தில் பிரசங்கம் செய்த பொழுது அவா அதைக் கேட்டுக்கொண்டிருந்தாராம். அன்று அவர் அந்தக் குடிசையிலிருந்து தம்முடைய கடப்பாறையை எடுததுக்கொண்டு போவதற்காக அந்தச் சமயம் அங்கு வந்தாராம். குடிசைக்குள் ஒருவர் தனியாக நின்று பிரசங்கிப்பதைக் கேட்டவுடன் உள்ளே போகாமல் வெளியே நின்றுகொண்டு மரச் சுவரிலிருந்த இடுக்கு வழியாகக் கேட்டுக் கொண்டிருந்தாராம். இவர் யார் பைத்தியக்காரர் என்று எண்ணினாராம்.

அந்த மனிதர் மேலும் கூறியது :—

என்னுடைய இருதயத்தின் சுவர்கள் எவ்வளவோ திண்ணமாயிருநதபோதிலும் அதிலுள்ள ஒரு இடுக்கு வழியாகத் தங்களுடைய அமுத மொழிகள் என்னுடைய இருதயத்திற்குள் நுழைந்து விட்டன. நீங்கள் கணடு கொள்வீர்களோ என்று வெட்கப்பட்டு, என்னுடன் வேலை செய்தவர்கள் இருந்த இடத்திற்கு ஓடிப்போய் விட்டேன். ஆனால் என்னுடைய மனமானது பல வாரங்கள் வருத்தப்பட்டுக் கொண்டேயிருந்தது. இறுதியில் பைபில் எடுத்துப் படிக்க ஆரம்பித்தேன். மற்றவர்கள் கேலி செய்தார்கள். ஆயினும் வழி தவறிப்போன ஆடுகளைப் பறறிச் சொல்லியிருந்த பாகத்தைப் படித்தேன். நீங்கள் அன்று பிரசங்கித்தது போலவே நான் அவர்களுக்கு அதைப் பற்றிக் கூறினேன். அவர்கள் ஒவ்வொருவரும் ஆணடவனிடம் பக்தி செலுத்தும் வரை நான அவர்களைச் சும்மா விடவில்லை. அவர்களில் மூவர் மற்ற இடங்களில் மதபோதனை செய்வதற்காகச் சென்றார்கள். நீங்கள் ஆளில்லாத இடத்தில செய்த பிரசங்கத்தின் பயனாக சுமார் ஆயிரம் பேர் கடவுள் பக்தர்கள் ஆயிருக்கிறார்கள்.

சேவா கிராமம், — 16-8-46. — மோ. க. காந்தி

## கோவா

திரு காக்கோட்கார் என்பவரைக் கைதி செய்து தண்டித்த விஷயத்தைப்பற்றிக் கீழ்க்கண்ட தந்திகள் வந்திருக்கின்றன :—

"புருஷோத்தம் காக்கோட்கார் கோவாவில் நடக்கும் சத்தியாக்கிரக இயக்கம் சம்பந்தமாகக் கைதி செய்யப்பட்டிருக்கிறார். அரசியல் கைதியாயிருந்தும் அவரைக் கொலையும் கொள்ளையும் செய்ததாக விசாரணை செய்யப்போகிற குற்றவாளிகளுடன்சேர்த்துக் காற்றோட்டமில்லாத ஈரமான அறைகளில் அடைத்து வைத்திருக்கிறார்கள். அவருக்குக் கொடுக்கப்படும் ஆகாரம் சாதாரணமாக ஒருவருக்குவேண்டிய அளவில பாதியாகவே இருக்கிறது. முழு ஆகாரம் கொடுப்பதற்காக வேலைசெய்யத் தயாராய் இருப்பதாகச் சொன்னார். தம்முடனிருக்கும் மற்றக் கைதிகளையும் நல்லவிதமாக நடத்தவேண்டுமென்று கேட்டுக் கொண்டார். ஆகாரவிஷயத்தில் அதிகாரிகள் அவருடைய வேண்டுகோளை லட்சியம் செய்யவில்லை. அதனால் அவர் சென்ற மூன்று நாட்களாக உண்ணாவிரதம் இருந்து வருகிறார். அதிகாரிகளின் மனோபாவம் அகமபாவம் உடையதாகவும் மனதைப் புண்படுத்துவதாகவும் இருக்கிறது".

"புருஷோத்தம் காக்கோட்கார் உண்ணாவிரதமிருக்க ஆரமபித்து 5-நாள் ஆகிறது. நிலைமை கவலைக்கிடமாய் இருக்கிறது. வெளியிலுள்ளவர்கள் போலீஸ் மேற்பார்வையில் அவரைப் பார்க்க அனுமதிக்கப் படுகிறார்கள். அவருடைய நிலைமையைப் பற்றி அதிகாரிகள் அலட்சியமா யிருக்கிறார்கள்"

கோவாவிலுள்ள அதிகாரிகளின் மீது கூறப்படும் குற்றச்சாட்டுக்கள் உண்மையாய் இருக்குமானால் அவைகள் அவர்களுக்கு இழிவைத் தருவனவாகவே இருக்கின்றன. கோவாவிலுள்ள சாத்வீக எதிர்ப்பினர், அதிகாரிகள் எவ்வளவு கேவலமாக நடத்தின போதிலும் பயந்துபணிந்து விடமாட்டார்கள் என்று நம்புகிறேன்.

உண்ணாவிரதம் இருந்துவருவது சரிதானா என்பதைப் பற்றி எனக்குச் சந்தேகமாயிருக்கிறது. ஆயினும் அதனால் எண்ணியமலன் கிடைக்குமென்று நம்புகிறேன். எப்படியானாலும் ஆரம்பித்தாய் விட்டது. இறுதிவரை இருந்து தீரவேண்டியதுதான்.

சேவாகிராமம் — 16.8.46 — மோ. க. காந்தி

## ஹரிஜனங்களை மறக்கவேண்டாம்

ஒரு நிருபர் எழுதுகிறார் :—

"காலஞ்சென்ற லோகமான்ய திலகர் ஆரம்பித்து வைத்த கணேஷ் உத்சவம் வரப்போகிறது. அந்தச் சமயத்தில் அனேக சங்கங்கள் நம்முடைய மந்திரிகளையும் தலைவர்களையும் பிரசங்கம் செய்வதற்காக அழைக்கும். அந்த வைபவத்தில் கலந்து கொள்ள ஹரிஜனங்களுக்கு அனுமதியளித்தாலன்றி அவர்கள் அந்த அழைப்பை எற்றுக்கொள்ளக்கூடாது என்று யோசனை கூற விரும்புகிறேன். அவர்கள் பிரசங்கம் செய்யப்போகும்பொழுது ஹரிஜனர் ஒருவரையேனும் தங்களுடன் கட்டாயமாகக் கூட்டிக் கொண்டு போகவேண்டு மென்றும் யோசனைகூற விரும்புகின்றேன்".

மேற்கண்ட யோசனை மிகவும் பொருத்தமானதே. ஜாதி ஹிந்துக்கள் உண்மையாகவே தீண்டாமையை ஒழித்துவிட விரும்பினால், அவர்கள் பகிரங்கமாக ஹரிஜனங்களுடன் பழகவேண்டியது அவசியமாகும். அதிலும் இந்தமாதிரியான ஹிந்து விழாக் கொண்டாட்டங்களில் ஹரிஜனங்களைத் தங்களுடன் சேர்த்துக் கொள்வது இன்றியமையாததாகும்.

சேவா கிராமம் — 16-8-46 — மோ. க. காந்தி

# தமிழ் ஹரிஜன்

ஆகஸ்ட் 25 ஞாயிறு 1946

## பலாத்காரம் சாதிக்கக்கூடியது யாது?

சிந்து மாகாணத்திலுள்ள பொறுப்பு வாய்ந்த மந்திரிகளும் அவர்களைப் போலவே பொறுப்பு வாய்ந்த இதர முஸ்லிம் லீகர்களும் பச்சை பச்சையாக பலாத்காரத்தைப் போதித்துக் கொண்டிருப்பதாகப் பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன. உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவது தவறு. உண்மையை ஒளியாமல் கூறுவது தர்மம். ஆனால், ஒளியாமல் கூறப்படும் விஷயம் ஆபாசமானதாயிருந்தால் ஒளியாமல் சொல்வதென்பது லீகர் சொன்னாலும் வேறு யார் சொன்னாலும் வெறுத்து ஒதுக்க வேண்டிய அதர்மமே ஆகும். முஸ்லிம் லீகில் சேராத முஸ்லிம்கள் துரோகிகள் என்று ஒருவர் சொல்லுகிறார். ஹிந்துக்கள் காபிரிகள், அவர்களைக் காபிரிகளைப் போலவே நடத்த வேண்டுமென்று மற்றொருவர் சொல்லுகிறார்.

நேரடியான செயல் என்றால் என்ன என்பதையும் அதை எப்படி நடத்த வேண்டும் என்பதையும் கல்கத்தா நகரம் கண் முன்னால் நிதர்ஸனமாகக் காட்டிவிட்டது.

இந்த பலாத்காரச் செயல்களால் லாபம் அடைந்தவர் யார்? சாதாரணமான முஸ்லிம் ஜனங்கள் அல்லர். இஸ்லாம் என்னும் பதத்திற்கு சாந்தி சமாதானம் என்பது பொருள். அதனால் உண்மையாக இஸ்லாம் மதத்தை அனுஷ்டிப்பவர்களும் லாபம் அடையவில்லை. ஸலாம்-ஆ-லேகும் என்று முஸ்லிம்கள் கூறும் வணக்க மொழிகளின் அர்த்தம், தங்களுக்குச் சாந்தி உண்டாவதாக என்பதாகும். வாழ்வில் பலாத்காரத்தையும் உபயோகிக்க வேண்டிய சந்தர்ப்பங்கள் உண்டாகலாம். ஆனால் பத்திரிகைகளில் வரும் செய்திகளை நம்புவதாய் இருந்தால், கல்கத்தாவில் காணப்படும் பலாத்காரம், அத்தகைய பலாத்காரமாகாது. எந்த விதமான பாகிஸ்தானத்தையும் முட்டாள்தனமாக பலாத்காரத்தை உபயோகிப்பதன் மூலம் பெற்றுவிட முடியாது. அறிவோடு பலாத்காரத்தை செய்ய முடியும் என்று வைத்துக்கொண்டுதான் அறிவில்லாத பலாத்காரம் என்று கூறுகிறேன். கல்கத்தாவில் நடப்பது அறிவோடு செய்யும் பலாத்காரத்துக்கான உதாரணமன்று. அறிவில்லாமல் செய்யும் பலாத்காரம் சாதிக்கக்கூடியதெல்லாம் அன்னிய அரசாட்சியின் வாழ்நாளை நீடிக்கச் செய்வதே ஆகும். பிரிட்டிஷ் மந்திரி தூது கோஷ்டியார் இந்திய மகாஜனங்களின் பிரதிநிதிகளிடம் அதிகாரத்தைச் சமாதான முறையில் மாற்றிக் கொடுக்க விரும்புகிறார்கள் என்று நான் நம்புகிறேன். ஆனால் நாம் பிரிட்டிஷ் துப்பாக்கியின் ஆதரவை நாடுவதாயிருந்தால் பிரிட்டிஷார் போகமாட்டார்கள். அவர்கள் போனாலும் வேறு ஏதேனும் அன்னிய அரசாங்கம் வந்து புகுந்துவிடும். பிரிட்டிஷ் துப்பாக்கி உபயோகப்படுத்தப்படும் போதெல்லாம் நம்மை பலாத்காரம் செய்யும்படி தூண்டுவதற்காகச் சில துராத்மாக்களை ஏவி விடுகிறார்கள் என்று கூறுவது பெரிய தவறாகும். அப்படிப்பட்ட துராத்மாக்கள் வேலை செய்வது உண்மைதான். ஆனால் அதையே சொல்லிக்கொண்டு நாம் விஷயத்தின் உண்மையை அறியாமல் ஏமாந்து போகக்கூடாது. கல்கத்தா நகரம் இப்பொழுது கொஞ்ச காலமாக அபகீர்த்தி அடைந்திருக்கிறது. சென்ற சில மாதங்களில் அங்கே பல தவறான ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றிருக்கின்றன. இந்த அபகீர்த்தி இப்படியே வளர்ந்துகொண்டு போகுமானால் கல்கத்தா அரண்மனை நகரம் என்று கூறப்படாமல் இறந்தோர் நகரம் என்றே கூறப்படும். கல்கத்தாவில் நடைபெறும் பலாத்காரம் அங்கேயே அழிந்து போகவேண்டுமென்றும் மற்ற ஊர்களுக்கும் பரவிவிடக்கூடாதென்றும் ஆசைப்படுகிறேன். ஆனால் அது விஷயம் முஸ்லீம் லீக் தலைவர்களைப் பொறுத்ததாகும். ஆயினும் மற்றவர்களுக்கும் பொறுப்பில்லை என்று சொல்ல முடியாது. அவர்கள் பழிக்குப் பழி வாங்கலாம் அல்லது சும்மா இருந்துவிடலாம். மன உறுதி இருந்தால் சும்மா இருந்துவிடுவது சுலபமாகும். பழிக்குப் பழி வாங்குவது சிக்கலான விஷயம். பழிக்குப் பழி வாங்குவது என்றால் ஒன்றுக்கொன்று பழி வாங்குவதா அல்லது ஒன்றுக்குப் பல பழி வாங்குவதா?

சேவாகிராமம் — 19-8-46 — மோ. க. காந்தி

## கொலைக்கு நஷ்ட ஈடு

காலஞ்சென்ற பாய் ராஜாபலியின் சகோதரரோ மற்ற நெருங்கிய உறவினரோ அவர் கொலையுண்டதற்காகச் சர்க்காரிடமிருந்து பண நஷ்ட ஈடு கேட்கலாமா என்று கேள்வி கேட்கப்படுகிறது. இறந்து போனவர் தம்முடைய மரணத்தை ஒரு நஷ்டமாக மதித்திருக்கமாட்டார். உண்மை யாதெனில் கொஞ்சங்கூடப் பழிக்குப் பழி வாங்காமலிருந்தால் இத்தகைய கொலைகள்தான் இனிமேல் கொலைகள் நடவாமல் செய்ய முடியும் என்பதாகும். பழிக்குப் பழி வாங்கவோ அல்லது நஷ்ட ஈடு கேட்கவோ ஆரம்பித்தால் அந்த நிமிஷத்திலேயே, வேண்டுமென்று செய்த தியாகத்தின் பலன் முழுவதும் அழிந்து போகும். அதனால் இறந்து போனவருடைய ஆன்மா எப்படிச் சமாதானமானதாக இருக்க முடியும்? கொலையை ஒரு நாளும் கொலை மூலமாகவோ நஷ்ட ஈடு மூலமாகவோ பழி வாங்கிவிட முடியாது. பழி வாங்குவதற்குரிய ஒரே வழி பழி வாங்க வேண்டுமென்ற ஆசை சிறிதுமில்லாமல் மனப்பூர்வமாக பிராணத் தியாகம் செய்வதே யாகும். இதைச் சரி என்று ஏற்றுக் கொள்கிறவர்கள் தங்கள் அன்புக்குரியவர்கள் இறந்து போனதற்காக நஷ்ட ஈடு கேட்க ஒரு நாளும் கனவு கூடக் காணமாட்டார்கள். பழிக்குப் பழி வாங்குவது என்னும் தத்துவத்தைக் கடைப்பிடித்தால் மேலும் மேலும் கொலைகள் நடந்துகொண்டேதான் போகும். இன்று இந்த விஷயம் எல்லோர்க்கும் புலனாகியிருக்கிறது. பழி வாங்குவதும் நஷ்ட ஈடு பெறுவதும் தனிப்பட்ட நபர்க்குச் சிறிது திருப்தி அளிக்கலாம். ஆனால் அதனால் சமூகத்துக்குச் சாந்தியோ உயர்வோ உண்டாக மாட்டாது என்பது என்னுடைய உறுதியான நம்பிக்கை.

பழி வாங்குவதையே கொள்கையாகவுடைய சமூகத்தில் தனிப்பட்டவர்கள் எவ்விதம் நடந்து கொள்வது என்ற கேள்வி எழுகின்றது. அதற்குப் பதில், செய்ய வேண்டியது இது என்று கூறுவதன்று, செய்ய வேண்டியதைச் செய்து காட்டுவதேயாகும். யாருக்குத் தீமை செய்யப்பட்டதோ அவர்தாம் அப்படிச் செய்து காட்ட முடியும். ஆதலால் கடைசியாகத் தீர்மானம் செய்ய வேண்டியவர்கள் பாய் ராஜாபலியின் உறவினர்களே யாவர். என்னுடைய கடமை எல்லாம் எனக்குத் தெரிந்த அளவு அஹிம்சா மார்க்கத்தைக் காட்டுவதே யாகும்.

சேவா கிராமம், — 19-8-46 — மோ. கா. காந்தி

(ஹரிஜன சேவக்கிலிருந்து)

## கதருக்குச்செய்யும் துரோகம்

ஒரு நிருபர் எழுதுகிறார் :—

"ஜூலை மாதம் 31-ம் தேதி மாலை 6 மணிக்கு கதர் அணிந்திருந்த 13 கலாசாலை மாணவர்கள் சட்டசபை மெம்பரான ஒரு காங்கிரஸ் பிரமுகருடைய தலைமையில் கதர் கடைக்கு வந்தார்கள், கதர் இல்லாததால் கடை மூடியிருந்தது. கதர் பீஸுகள் சிலவே இருந்தன. கதர் அணிபவர்கள் 1,500 பேரையும் இந்தச் சில பீஸுகளைக்கொண்டுத் திருப்திசெய்ய முடியாது. அதனால் அவைகள் மாடியில் வைக்கப்பட்டிருந்தன. வந்தவர்கள் உடனே மாடிக்குப் போய் பலாத்காரமாக 13 முழு பீஸுகளை எடுத்துக் கொண்டு பணம் வாங்கிக் கொள்ளும்படி மானேஜரிடம் சொன்னார்கள். அவர்கள் நூலும் கொடுக்கவில்லை. மானேஜர் பணத்தை எடுத்துக் கொள்ள மறுத்து விட்டார். அவர்கள் துணியை எடுத்துக் கொண்டு போய் விட்டார்கள்.

இந்த நிலைமையில் துணியை எடுத்துக்கொண்டு போவதைத் தடுப்பதற்காக மானேஜர் என்ன செய்திருக்க வேண்டும்? போலீஸில் பிராது கொடுக்க வேண்டியது மானேஜருடைய கடமையல்லவா?"

மானேஜர் இப்படிக்கடையில் புகுந்து கொள்ளையடிப்பதை அஹிம்ஸா முறையில் உயிரைக் கொடுத்தாவது தடுத்திருக்க வேண்டும். கொள்ளை யடித்தவர்களைத் தாமாகத் துணியைக் கொண்டு வந்து கொடுக்கும்படி செய்ய சகலவித முயற்சிகளும் செய்து பயன்படாமல் போனால் மானேஜர் அந்த அக்கிரமிகளின் மீது பிராது கொடுக்க உரிமை உடையவரே ஆவார்.

மாணவர்கள் போக்கிரித்தனம் செய்வது சர்வ சாதாரணமான காரியமாக ஆகி இருக்கிறது. கேட்கவே கேவலமாயிருக்கிறது. அதிலும் ஒரு காங்கிரஸ் பிரமுகர் அவர்களுக்கு ஆதாவு தருவதானால் அது வெட்கப்பட வேண்டிய காரியமே. கொள்ளையடித்துக் கொண்டுவரும் கதரை உடுத்துவது சுயராஜ்ஜியத்தின் தத்துவங்களை அறியாத செயலாகும். கதர் கட்டுவதை வெறும் கேலிக்கூத்தாகச் செய்வதுமாகும்.

சேவா கிராமம், — 18-8-46. — மோ. க. காந்தி

## வாரக் கடிதம்

*மகாதேவ தேசாய் தினம்*

சேவா கிராமத்திலுள்ள பல்வேறு ஸ்தாபனங்கள் ஒன்றுகச் சேர்ந்து ஆகஸ்டு 15வ மகாதேவ தேசாய் சிறையில் இறந்துபோன ஞாபகார்த்தமாக நாலாவது வருஷாப்திகதினத்தைக் கொண்டாடினார்கள்: மாணவர்களும் ஊழியர்களும் மகாதேவ தேசாயின் மனதிற்குகந்த ரவி பாபுவின் கீதங்களைப் பாடிக்கொண்டு ஆசிரமத்தை வலம் வந்தார்கள். இறுதியில் மகாதேவ தேசாயின் குடிசைக்கு எதிரே வந்து நின்று எல்லோரும் ஒன்றுகச் சேர்ந்து பாடிவிட்டுக் கலைந்து போனார்கள்.

மகாதேவ தேசாயினுடைய கையெழுத்துப் பிரதிகளைக் கண்காட்சியாக வைப்பதும், எல்லோரும் ஒன்று சேர்ந்து ஏக காலத்தில் நூற்பதும் அன்றைய நிகழ்ச்சி முறையில் கௌரவ ஸ்தானம் பெற்றிருந்தன. அவருடைய தினசரி குறிப்புப் புஸ்தகங்களும் அவர் எழுதிய புஸ்தகங்களின் கையெழுத்துப் பிரதிகளும் அவருடைய கடிதங்களும் அச்சு எழுத்துப் போல் அழகாக எழுதப்பட்டிருந்தன. அவைகள் கண்ணுக்கு ஆரா விருந்தாக இருந்தன. அவர் இங்கிலீஷ், குஜராத்தி, ஸமஸ்கிருதம், பெர்ஸியன் ஆகிய எந்த லிபியை எழுதினாலும், வெகு நேர்த்தியாகவே இருக்கும். அந்தக் கண்காக்ஷியில் காங்கிரஸ் மாபெருந் தலைவர்களுடைய கையெழுத்துப் பிரதிகளும் மகாதேவ தேசாயைப் போல் நன்றாக எழுத வேண்டுமென்று முயன்று அழகாக எழுதி வந்த மற்ற தலைவர்களின் கையெழுத்துப் பிரதிகளும், மூலாதாரக் கலாசாலை மாணவர்களின் கையெழுத்துப் பிரதிகளும் வைக்கப்பட் டிருந்தன.

காந்தியடிகள் எதையும் சிறு விஷயமென்று அலட்சியம் செய்வதில்லை. சிறுவிஷயங்கள்தான் தம்முடைய வாழ்வை உருவாக்கியதாக அடிக்கடி கூறுவார். 15வ மாலை நடந்த பிரார்த்தனைக் கூட்டத்தில் மகாதேவ தேசாயினுடைய ஜீவிதத்தின் மூன்று முக்கியமான அம்சங்களைக் குறித்துப் பேசினார். அவர் கூறியதாவது :—

மகாதேவ தேசாயினுடைய நண்பர்களும், பக்தர்களும் அவருக்கு அதிகப் பிரியமான காரியத்தைச் செய்வதின் மூலம் அவர் இறந்த தின வருஷாப்திக தினத்தைக் கொண்டாடி வருகிறார்கள். அவருக்குப் பல விஷயங்களில் பிரியம். அவற்றுள் கைராட்டினமே முதல் ஸ்தானம் வகித்து வந்தது. அவர் ஒழுங்காக நூற்று வந்தார். அவர் கலைஞராக இருந்தபடியால் அழகாகவும் நூற்று வந்தார். எவ்வளவு அதிகமான வேலை இருந்தபோதிலும், எவ்வளவு அதிகமாகச் சோர்ந்து போயிருந்தாலும் அவர் நூற்காமல் இருந்து விடுவதில்லை. அது அவருடைய சோர்வை நீக்கும் அமிர்தமாக இருந்து வந்தது.

அவர் கற்றுத் தேர்ச்சி பெற்றிருந்த பல வித்தைகளுள் யாரும் இணையில்லை என்று சொல்லும்படியாக எழுத்து எழுதக் கூடிய வித்தையும் ஒன்று. அந்த வித்தையில் அவர் பெரிய நிபுணர். ராம்தாஸ் சுவாமி அழகாக எழுதுவதைப் பளபளவென்று ஜ்வலிக்கும் முத்துக்கு ஒப்பிட்டிருக்கிறார். மகாதேவ தேசாயின் பேனா எழுதும் ஒவ்வொரு எழுத்தும் மாசற்ற முத்துப் போல் இருக்கும். எல்லோரும் பின்பற்ற வேண்டிய அவருடைய மூன்றாவது குணவிசேஷம் யாதெனில் இந்திய பாஷைகளிடத்தில் அவருக்கிருந்த அளவற்ற அன்பேயாகும். அவர் பல மொழிகளில் பாண்டித்தியம் உடையவர். வங்காளி, மாராத்தி, ஹிந்தி, மூன்றிலும் நிபுணர். உருதுவும் கற்றுக் கொண்டு வந்தார். சிறையிலிருந்தபொழுது தம்முடன் கைதியாயிருந்த குவாஜா சாஹிபின் உதவியைக்கொண்டு பெர்ஸியன் பாஷையும் அரபு பாஷையும் கற்றுக்கொள்ளக்கூட முயற்சி செய்து வந்தார்.

இப்பொழுது ரவிபாபுவின் கீதம் பாடப்பெற்றது, கேட்டீர்கள். இது மகாதேவ தேசாய்க்கு மிகப் பிடித்தமான கீதங்களில் ஒன்று. அந்தப் பாடல் வருமாறு :—

> இதயமானது ஈரமில்லாமல் காய்ந்து போகும் பொழுது, இறைவனே! என்மீது உமது கருணை மழையைப் பொழிந்தருளும். வாழ்வில் சுவை குன்றும் பொழுது கவிதையைக் கொண்டுதாரும்.
>
> நாலாபக்கங்களிலும் சத்தமும் சந்தடியும் அதிகமாகி, என்னை உம்மை விட்டுப் பிரிக்கும்பொழுது என் மௌன குருவே! எனக்கு ஓய்வும் சாந்தியும் தந்தருளும்.
>
> என்னுடைய இதயமானது இரவலனாகி மூலையில் அடங்கி உட்கார்ந்திருக்கும் பொழுது, என்னுடைய மனத்தின் கதவை உடைத்துத் திறந்து அரசரைப் போல் சம்பிரமமாக வந்தருளும்.
>
> ஆசையானது மயக்கத்தைக் கொடுத்து என்னுடைய மனத்தைக் குருடாக்கும் பொழுது, என் தூய சுடரே! இடியுடனும் மின்னலுடனும் எழுந்தருளும். (கீதாஞ்சலி)

இந்த கீதத்தை மகாதேவ தேசாய் குஜராத்தியில் செய்யுளாகச் செய்திருக்கிறார். இந்தக் கீதமே அவருடைய ஆன்மாவின் ஆவலைக்காட்டுவதாகும். அந்த

ஆவலையே நீங்களும் கொள்ள வேண்டும். மகாதேவ் கொடுககக் குறையாத குண விசேஷங்களுடையவர். அவைகளை நீங்களும் உங்களிடத்தில் அமைத்துக் கொள்ள முடியும். அதனால் அவருடைய குணங் கள் அணுவளவும் குறைந்து விடா. அது தான் ஆன்மச் செல்வத்தின் அழகு.

**பண்டிதர் நேரு**

பண்டித ஜவஹர்லால் நேரு காரியக் கமிட்டிக் கூட்டத்திற்காக வர்தாவுக்கு வந்திருந்தார். அப்பொழுது சேவா கிராமத்திலுள்ள ஸ்தாபனங்களெல்லாம் சேவாகிராம ஆச்சிரமத்திலுள்ள புது தாலிமி சங்க மண்டபத்திற்குப் பண்டிதரை அழைத்தன. பண்டிதர் வந்து அழகான ஒரு சிறு பிரஸங்க்ம் செய்தார்.

**அவர் பேசியதாவது :—**

நான் முன்னால் வந்திருந்த பொழுது காணப்பட்டதை விட இப்பொழுது இங்குள்ள ஸ்தாபனங்கள் அதிக விரைவாக வளர்ச்சி அடைந்து வந்திருப்பதைக்காண எனக்கு மிகுந்த சந்தோஷமாக இருக்கிறது. நான் முன்னால் வந்த பொழுது அங்கு மிங்குமாகச் சில குடிசைகளே இருந்து வந்தன. இப்பொழுது நிர்மாண வேலை செய்வதற்காகப் பல ஸ்தாபனங்கள் ஏற்பட்டு சுருசுருப்பாக வேலை செய்து கொண்டிருக்கின்றன. இங்கு பயிற்சி பெறுவதற்காக வந்திருப்பவர்கள் தங்கள் ஊருக்குப் போனபின் பெரிய வேலைகளைச் செய்யும் பொறுப்புடையவர்கள் ஆவார்கள். நாற்பதுகோடி மக்களின் வாழ்வை உயர்த்துவதென்பது எளிதான காரியமன்று. இப்பொழுது பத்திரிகைகளில் எல்லாம் அரசியல் விஷயங்களே நிறைந்திருக்கின்றன. ஒரு விதத்தில் அது நியாயமேயாகும். ஆயினும் அரசியல் சுதந்திரம் தேடுவது, நிர்மாண வேலையைச் சரிவரச் செய்வதற்குள்ள தடைகளை நீக்குவதற்கேயாகும். நிர்மாண வேலையின் ஸ்தானத்தை அரசியல் சுதந்திரம் ஏற்றுக்கொள்ள முடியாது. நாம் இங்கிலீஷ்காரர்களைத் துரத்திய பிறகும் இப்பொழுதுள்ள நிலைமையிலேயே இருப்போமானால் நாம் அதனால் எவ்வித பயனும் அடையப்போவதில்லை. அரசியல் சுதந்திரமானது, தேச நிர்மாண வேலையைச் செயய முடிமாமலிருக்கும் தடைகளை நீக்குவது ஒன்றிக்கே பயன்படும். உண்மையான வேலை அதன் பிறகு தான் ஆரம்பமாக வேண்டும். நம்முடைய நாட்டிலுள்ள கோடானு கோடி ஏழை மக்களின் வறுமையையும் வேலையில்லாக் கஷ்டத்தையும் நீக்கி அவர்களுடைய பொருளாதார நிலைமையைச் சீர்ப்படுத்த வேண்டும்.

செல்வமென்றால் என்ன? தங்கமும் வெள்ளியும் அல்ல. பாலை வனத்தில் வழி தவறிப்போன பிரயாணி தங்கத்தை உண்ணவும் முடியாது, குடிக்கவும் முடியாது. அவர் உலகத்திலுள்ள தங்கம், வெள்ளி முழுவதையும் கொடுத்தேனும் தம்முடைய உயிரைக் காப்பாற்றக் கூடிய ஒரு கவளம் சோறும் ஒரு மடக்கு ஜலமும் பெறவே விரும்புவார். தங்கமும் வெள்ளியும் உபயோகமான பொருள்களை வாங்குவதற்கு உபயோகமான சாதனங்களாகவே உபயோகிக்கப்படுகின்றன. ஒரு தேசத்தின் செல்வத்தை அங்குள்ள தங்கத்தை வைத்து மதிப்பதில்லை. அங்குள்ள உபயோகமான பொருள்களையும் அப்பொருள்களை உண்டாக்கக் கூடிய சக்தியையும் வைத்தே மதிக்கப்படும். ஒரு தேசத்தில் ஒரு அவுன்ஸ் தங்கமும் வெள்ளியும் இல்லா விட்டாலும் கூட அங்குள்ள மக்கள் ஆரோக்கியமாயும் சோம்பலற்றவராயும் உபயோகமான பொருள்களை உண்டாக்குவதற்கு வேண்டிய சாமர்த்தியமும் திறமையும் உடையவராயும்இருந்தால்அந்தத்தேசமேசெல்வமுடைய தேசம். அதற்கு மாறாக ஒருதேசத்தில் தங்கமும் வெள்ளியும் ஏராளமாகக் குவிந்திருந்தபோதிலும் இந்தக் குணங்கள் இல்லாத தேசம் தரித்திரமான தேசமேயாகும். எவர் உண்டாக்காமல் உண்ணுகிறாரோ அவர் பிறர் உழைப்பை உபயோகித்து உயிர்வாழும் புல்லுருவியேயாவர். அவர் சமூகத்துக்கு ஒரு பாரமேயாவர். இன்று ஒரு பக்கம், வேலை செய்யாமல் சோம்பேறியாய் வாழும் பணக்காரரும், மற்றொரு பக்கம், வேலை கிடையாமல் பட்டினி கிடக்கும் ஏழைத் தொழிலாளர்களும் காணப்படுகிறார்கள். இந்தியா சுதந்திரமா யிருந்தபொழுது இந்த தேசத்தில் செழித்து வளர்ந்த பலவிதமான கைத்தொழில்களெல்லாம் கொலை செய்யப்பட்டு விட்டன. அதனால் பஞ்சங்கள் மறுபடியும் மறுபடியும் வந்து நாட்டைப் பாழாக்கிக் கொண்டிருக்கின்றன. அதனால் தேசமானது பலவீனமாய்ச் சோர்ந்து கிடக்கின்றது. இதுதான் நம்முடைய தற்கால நிலைமை. அதை நாம் மாற்றியாக வேண்டும். ஒருவர்கூட வேலை யில்லாமலோ உணவில்லாமலோ இருக்கலாகாது. சகலருக்கும் அபிவிருத்தி அடைவதற்குரிய சகல வசதிகளும் சரிசமமாக ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். சிலர் அறிவுடையவர்கள், சிலர் அறிவற்றவர்கள்; சிலர் பலமுடையவர்கள், சிலர் பலமற்றவர்கள். இந்த விதமாகப் பார்த்தால் மக்களிடம் சமத்துவம் இல்லை யென்று சொல்லலாம். திறமையை வளர்த்துக் கொள்ள வசதிகள் தர மறுத்துவிட்டு, திறமையில்லை யென்று குறை கூறுவது தவறு. ஏழையாயும், எழுத்து வாசனை யில்லாமலும், அரைப் பட்டினியாயும் உள்ள கிராமவாசியிடம், படிப்பதற்கும் வளர்வதற்கும் வேண்டிய சகல வசதியும் உடையவரிடம் காணப்படும் சக்தியையோ திறமையையோ எப்படி எதிர்பார்க்க முடியும்? எல்லோரும் எல்லா அம்சங்களிலும் சரிசமானமாக இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை, ஆனால் எல்லோரும் வளர்ச்சியடைவதற்கு வேண்டிய சகல வசதிகளும் சரிசமானமாகப் பெறவேணடியது அவசியமாகும். அப்பொழுதுதான் ஒருவருடைய திறமையைச் சரியானபடி அளந்து அறிய முடியும்.

பணம் தேடுவதற்குள்ள சக்தியை வைத்துத் திறமையை அளக்க முடியாது. பிறரைக் கெடுத்துத் தேடும் பணம் தேசத்திக்குப் பயன் தராது. ஒரு நாற்காலி மேஜைபோன்ற சாதாரணமான பொருளாயிருந்தாலும் உபயோகமான அந்தப் பொருளை செய்கிறவர்களும் தேசத்திற்கு செல்வத்தை தேடிக் கொடுப்பவராவர். அப்படிப் பட்டவர்கள்தான் தேசத்தின் சொத்து ஆவார்கள். இந்தக் காலத்தில் பள்ளிக்கூடத்துப் படிப்புக்கு அளவுக்கு மிஞ்சிய மதிப்புக் கொடுப்பது வழக்கமாகி யிருக்கிறது. இந்தக் காலத்திலும் இதற்கு முந்திய காலத்திலும் பொதுஜனத் தலைவரா யிருந்தவர்களில் அநேகர் வக்கீல் வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்பது உண்மைதான். ஆனால் பள்ளிக்கூடத்துப் படிப்பைக் கொண்டுமட்டுமே சுயராஜ்யத்தை நடத்திவிட முடியும் என்று நினைப்பது பெருந் தவறு. எல்லோரும் வக்கீல்களாகி விட்டால் தேசம் கெட்டுப் போகும். வக்கீல் ஒருவர்கூட இல்லாமல் தேசம் வாழ முடியும். ஆனால் தோட்டிகள் எல்லோரும் ஒரே ஒரு நாள் வேலை நிறுத்தம் செய்தாலும் பெரிய நெருக்கடி ஏற்பட்டுவிடும். அப்படி இருந்தும் சமூகத்திற்கு இணையற்ற சேவை செய்துவரும் இவர்களை அசுத்தமானவர்கள் என்றும் தாழ்ந்தவர்கள் என்றும் கூறுகிறோம். இப்படித்தான் நம்முடை காரியங்களெல்லாம் தலை கீழாக நடந்து வருகின்றன. நம்முடைய நாட்டிலுள்ள கிராமத்து ஜனங்களுக்குச் சேவை செய்வதற்கு, பயிற்சி பெற்ற ஊழியர்களும், கருமார்களும், எஞ்சினியர்களும், டாக்டர்களும், உபாத்தியாயர்களும் படை படையாகத் தேவையாகும். நாம் அவர்களுக்குப் பயிற்சி கொடுக்க வேண்டும். இங்கே நடைபெற்று வருவது அது தான். இந்த வேலையை நான் முதல்தரமான வேலை

யாக மதிக்கின்றேன். சில பெரியோர்களைக் கொண்டு ஒரு ஜன சமூகத்தை நிர்மாணம் செய்துவிட முடியாது. சாதாரண ஜனங்களை உயர்த்துவதால் மட்டுமே முடியும்.

அஸ்திவாரம் பலமாயிருந்தால் பெரிய மனிதர்கள் இல்லாவிட்டாலும் பாதகமில்லை; ஆதலால் அஸ்திவாரத்தைப் பலப்படுத்துவதே அதிமுக்கியமான வேலை. சாதாரண ஜனங்களை உயர்த்துவதற்காக வேறு யாரும் செய்ததைவிட அதிகமாக செய்திருக்கிறார் காந்தியடிகள். ஆனால் அந்த மாதிரிக் காரியங்கள் இன்னும் அதிகமாகச் செய்ய வேண்டியிருக்கின்றன. இன்று மாணவர்களாயிருப்பவர்கள் நாளை ஆசிரியர்கள் ஆவார்கள். அவர்களுடைய பயிற்சி குறைபாடுகளுடையதாயிருந்தால் சுயராஜ்யத்தின் அஸ்திவாரம் பலவீனமாயிருக்கும். இன்று இங்கே செய்யப்படும் வேலை வெளியே பிரமாதமாகத் தோன்றாது. ஆயினும் அதுதான் ஜீவாதாரமான வேலை. ஆதலால் இனி ஏற்படப் போகும் சுயராஜ்யத்திற்கு உறுதியான அஸ்திவாரம் அமைக்கும் வேலையில் இங்கே இத்தனை பேர் ஈடுபட்டிருப்பதைக் காண எனக்குப் பரம சந்தோஷமாயிருக்கிறது."

சுதேசம் திரும்பி வருகை

தாய் நாட்டினிடம் அன்பு செலுத்திய குற்றத்திற்காக மட்டுமே தேசப் பிரஷ்டம் செய்யப்பட்டு அயல் நாட்டில் முப்பது வருஷ காலம் இருந்துவிட்டு ஒருவர் தம் சொந்த நாட்டுக்குத் திரும்பி வந்தால் அவரை ஒரு அதிசய புருஷராகவே ஜனங்கள் எண்ணுவார்கள். அவ்விதம் தாய்நாடு திரும்பியிருக்கும் ராஜா மகேந்திர பிரதாபினுடைய தோற்றமும் நடையும் நம்மிடம் அதிசய உணர்ச்சியை அதிகரிக்கின்றன. அவர் கொஞ்ச காலம் ஆப்கன் பிரஜையாக ஆப்கானிஸ்தானத்தில் வசித்து விட்டுப் பிறகு ஜெர்மனி, ரஷ்யா, சைனா ஆகிய தேசங்களில் வசித்து வந்தார். இறுதியில் அமெரிக்கச் சேனை ஜப்பானைக் கைப்பற்றிய பிறகு, அவரை ஜெனரல் மெக்ஆர்தர் யுத்த குற்றவாளிகள் முகாமில் அடைத்து வைத்திருந்தார். சென்ற வருஷம் அக்டோபர் மாதத்தில் அவருடைய உயிர் ஊசலாடிக் கொண்டிருந்தது. அவர் தூக்குத் தண்டனை விதிக்கக் கூடிய நிலைமையில் இருந்தார். ஆனால் அவரோ அந்த நிலைமையிலும் உலகத்தில் சமாதானத்தை எப்படி நிலை நாட்டுவது, உலகத்திலுள்ள மக்களையெல்லாம் எப்படி ஒன்றாக இணைப்பது என்ற விஷயத்தைப் பற்றி சிந்தித்து அதற்கான ஒரு திட்டம் வகுத்து அதை வெளியிடும் பொருட்டு காந்தியடிகளுக்கு அனுப்பி வைத்தார்.

"நம்முடைய முஸ்லிம் சகோதரர்களும் யுத்தத்தில் ஈடுபட்டிருந்த இந்தியர்களும் சமஸ்தானாதிபதிகளும் இந்தியாவில் வசித்துவரும் ஆங்கிலேயர்களும் உலகத்தில் ஏற்பட்டுவரும் மாறுதல்களைச் சரியாக அறிந்து கொள்வார்களேயானால் அவர்கள் எல்லோரும் நம்முடைய காங்கிரஸில் சேர்ந்து பரஸ்பரம் ஒத்துழைக்க முடியும்." என்று எழுதினார். அந்த திட்டத்தினடியில் "பீட்டர் பிரதாப், மனிதஜாதியின் ஊழியன், உலக சம்மேளனத்தின் ஸ்தாபகன்" என்று கையெழுத்துச் செய்திருந்தார்.

அவர் இப்பொழுது நடைபெற்ற உலக மகா யுத்தத்தில் கலந்துகொள்ள மறுத்துவிட்டார். நேதாஜி போஸுடனும் சேரவில்லை. காலஞ்சென்ற திரு. ராஷ்பிஹாரி கோஷுடனும் சேரவில்லை. அவர் ஜப்பானிலிருந்தபொழுது, தாம் எந்த தேசத்துப் பிரஜையுமில்லை என்று சொல்லிவந்தார். அதனால் இந்தியாவுக்குத் திரும்பிவர உதவி செய்ய முயன்றுகொண்டிருந்த நண்பர்களுக்கு அதிகக் கஷ்டமாயிருந்தது. அவர் பல இந்திய பாஷைகளைப் பேசுவதோடு இங்கிலீஷ், ஜெர்மன், ரஷ்யன், பிரஞ்சு, பர்சியன் பாஷைகளையும் பேசுகிறார். அவர் தம்முடைய முறைப்படியே சகல மதங்களையும் ஒன்று சேர்த்து எல்லோரிடத்திலும் அன்பு செய்யும் ஒரு தனி மதத்தை ஸ்தாபிப்பதில் நம்பிக்கையுடையவராயிருக்கிறார். அவர் காந்தியடிகளைப் பார்ப்பதற்காக ஸேவா கிராமத்திற்கு வந்திருந்த பொழுது காந்தியடிகள் அவரை அவருடைய சர்வமதப் பிரார்த்தனையைச் சொல்லுமாறு கேட்டுக்கொண்டார். அவர் அன்று மாலை நடந்த பிரார்த்தனைக் கூட்டத்தில் ஹிந்து வேத சாஸ்திரங்களிலிருந்தும், பைபிளிலிருந்தும், கொரானிலிருந்தும், புத்த சாஸ்திரங்களிலிருந்தும் தாம் தயாரித்திருந்த பிரார்த்தனையைச் சொன்னார். அவர் வார்தாவில் சர்தார் படேலுடன் தங்கியிருந்தபொழுது தம்முடைய பிரார்த்தனையைச் சொல்வதில் ஆழ்ந்துபோய், பிறர் உண்ண, அவர் உண்ண மறந்து விட்டார். பல வருஷங்களுக்கு முன் அவர் பிருந்தாவனத்தில் பிரேம மகா வித்யாலயத்தை ஸ்தாபித்து, அதற்குத் தமது சொத்து முழுவதையும் எழுதி வைத்தார். இப்பொழுது பல வருஷங்கள் அயல் நாட்டிலிருந்து விட்டு சொந்தத் தேசம் திரும்பி வந்திருக்கிறார். அவருடைய நண்பர்களும் அந்த வித்தியாலயத்திலுள்ள ஊழியர்களும் அவரைச் சந்தோஷமாக வரவேற்பார்கள்.

சேவா கிராமம் — 19-8-46 — பியாரேலால்.

## மொத்தக் கொலை

ஒரு நண்பர் எழுதுகிறார் :—

"மைசூரிலும் ராயலஸீமாவிலும் ஏற்பட்டுள்ள உணவுப் பஞ்ச நிலைமை நாளுக்கு நாள் அதிக மோசமாக ஆகிக்கொண்டு வருகிறது. போதுமான அளவு தானியங்கள் வந்து சேராவிட்டால் கோவாபிரேட்டிவ் ஸ்டோர்கள், ரேஷன் தரமுடியாது. இப்பொழுதுள்ள ரேஷன் பட்டினி ரேஷன்தான். ஏனெனில் விவசாய மக்கள் நோயில்லாமல் இருக்கவேண்டுமானால் 24 அவுன்ஸ் அரிசி கொடுக்கப்படவேண்டும். ஆனால் 8 அவுன்ஸ்தான் கொடுக்கப்படுகிறது. ஆதலால் நவம்பர் டிசம்பரில் ஜனங்கள் பட்டினியால் கூட்டம் கூட்டமாக இறந்துவிடுவார்களென்று தோன்றுகிறது."

இந்த நண்பர் சொல்லுவதில் அரைவாசி மட்டுமே உண்மையாயிருந்தாலும்கூட அது நமக்கு இழிவேயாகும். நம்முடைய விசாலமான தேசத்தில் ஏராளமான நிலம் பயிர் செய்யப்படாமல் கிடக்கின்றது. பயிர் செய்யப்படும் நிலமும் சரியாகப் பயிர் செய்யப்படவில்லை. ஜலத்தை அணைகட்டித் தேக்கிவைப்பதற்கு வேண்டிய சாமர்த்தியம் இல்லாததால் ஜலம் வீணாகக் கடலில் போய் விழுந்து கொண்டிருக்கிறது. அயல் நாட்டிலிருந்து உணவுப் பொருள்கள் போதுமான அளவு வந்து சேராவிட்டால் நவம்பரிலும், டிஸம்பரிலும் ஜனங்கள் மொத்தமாகச் சாக நேரிடுவது நிச்சயமென்று இந்த நண்பர் கூறுகிறார். இது சம்பந்தப்பட்ட ஒவ்வொருவருக்கும் நான் கூறுவது யாதெனில் இந்தமாதிரிச் சாவு ஏற்பட்டால் அந்த மொத்தக் கொலைக்கு சர்க்கார்தான் குற்றவாளி என்பதாகும். பிறநாட்டிலிருந்து உணவை எதிர்பார்ப்பது பட்டினியை வெற்றிலை பாக்கு வைத்து அழைப்பதாகும். நவம்பருக்குள்ளாகப் போதுமான உணவை நம்முடைய நாட்டில் உண்டாக்க முடியாதென்று யாரேனும் தெளிவாக்கியிருக்கிறார்களா? உலக முழுவதும் நமக்கு உணவு வரவொட்டாமல் தடுத்தாலும்கூட கோடிக்கணக்கான மக்களை உடைய இந்த விசாலமான தேசம் பட்டினி இருக்கவேண்டியது அவசியந்தானா?

சேவாகிராமம், — 18-8-46 — மோ. க. காந்தி.

## சில கதைகள்

(1)

லண்டன் நகர முழுவதிலும் பிளேக் வியாதி பெரும் சேதம் விளைவித்துக் கொண்டிருந்தது. கிரேவன் பிரபு அயலூர் போய்விடத் தீர்மானித்தார். அதற்காக ஆறு குதிரை பூட்டிய கோச் வண்டி அவருடைய வாசலில் வந்து நின்று கொண்டிருந்தது. பிரபு அதில் ஏறப் போகும் பொழுது குதிரை மேலிருந்த ஒரு நீக்ரோவர் மற்றொரு வேலைக்காரரிடம் "இவர் பிளேக்கிலிருந்துதப்புவதற்காக லண்டனை விட்டு வெளி யேறுவதைப் பார்த்தால் இவருடைய கடவுள் பட்டணத்தில் வசியாமல் கிராமத்தில் வசிப்பதாகவே தோன்றுகிறது" என்று சொன்னார். இது பிரபுவின் காதில் விழுந்தது. அவருடைய மனதில் தைத்தது. "இது உண்மை தானே, கடவுள் எல்லா இடங்களிலும் தானே இருக்கிறார். அதனால் பட்டணத்திலிருந்தாலும் காப்பாற்றத்தானே செய்வார். நான் இங்கேயேதான் தங்கி இருப்பேன் குதிரைமே லிருந்த ஒரு நீக்ரோவர் எனக்கு ஒரு நல்ல உபதேசத்தைச் செய்து விட்டார். கடவுளே! என்னுடைய அவ நம்பிக்கையைப் பொறுத்தருளும். எங்கிருந்தாலும் காப்பாற்றுவீர் என்று எண்ணாமல் எங்கேயோ போய்விட எண்ணினேனே" என்று தமக்குள்ளேயே சொல்லிக் கொண்டு வண்டியைக் கொண்டுபோய் விடும்படி உத்தர விட்டு விட்டு வீட்டிற்குள் சென்றார். அதன்பின் பட்டணததிலேயே இருந்து கொண்டு பிளேக் நோய் வந்த நோயாளிகளுக்கு உதவி செய்தார். அந்தத் தொத்து நோய் அவரிடம் அணுகவே யில்லை.

(2)

லாணர்க் என்னு மிடத்திலுள்ள நிலக் கரிச் சுரங்கத்தில் ஒருநாள் அதிலுண்டாகும் கரிக் காற்று தீப்பிடித்துக் கொண்டு வெடித்தது. தாமஸும், பென்னட்டும் வெடித்த இடத்திற்கு, கொஞ்ச தூரத்தில் வேலை செய்து கொண்டிருந்தார்கள். சுரங்கத்தின் வாசலுக்கு ஓடிப்போய் வெளியேறி விடவேண்டுமென்று அவர்களுக்குத் தெரியும். போகும் வழியில் புகை மூச்சைத் திணறும்படி செய்து கொண்டிருந்தது. தாமஸ் திரும்பிப்பார்த்தார். பென்னட்டைக்காணோம். திரும்பிப்போய் பென்னட்டைக் கண்டார். பென்னட் மூர்ச்சித்துக் கிடந்தார். அவரை அசைத்துப் பார்த்தார். தூக்கினார். அவரைக் கூட்டிக் கொண்டு சுரங்கத்தின் வாசலை நோக்கிச சென்றார். ஓடுவோம், இல்லாவிட்டால் இறந்து விடுவோம் என்று சொல்லி அவரைத் தள்ளிக் கொண்டுபோனார். பென்னட் அதிகச் சிரமப்பட்டு மேலே போவதற்கான கூண்டை அடைந்தார். மேலே தூக்கப்பட்டார். ஆனால் அவரைக் காப்பாற்றுவதற்காகப் போன தாமஸ் மேலே வந்து சேரவில்லை. கரிக் காற்று அவரை வீழ்த்திவிட்டது. அவர் தம்முடைய நண்பர் சாகாம லிருப்பதற்காகத் தாம் செத்து வீழ்ந்தார்.

"நண்பர்களுக்காக, உயிர் விடுவதை விட உயர்ந்த அன்பு கிடையாது." (ஜான் 15—31)

(3)

ஒரு கிழவர் பணக்காரார். கஞ்சர். ஒருநாள் தம்முடைய பாதிரியாரிடம சென்றார். அவர் கிழவர் கையைப் பிடித்து ஜன்னலண்டைக் கூட்டிக் கொண்டு போய் அதோ பாரும் அங்கே என்ன தெரிகிறது என்று கேட்டார்.

கிழவர்:— ஆண்கள், பெண்கள், சிறு குழந்தைகள்.

அதன் பிறகு பாதிரியார் கிழவரை மறுபடியும் கையைப்பிடித்து நிலைக் கண்ணாடியிடம் கூட்டிக் கொண்டுபோய் "இப்பொழுது என்ன தெரிகிறது பாரும்" என்று கேட்டார். "இப்பொழுது என்னைத் தான் காண்கிறேன்" என்று கிழவர் சொன்னார்.

அதன் பிறகு பாதிரியார் கூறியதாவது :—

இதோ பாரும் ஜன்னலும் கண்ணாடிதான், நிலைக்கண்ணாடியும் கண்ணாடிதான். ஆனால் நிலைக்கண்ணாடியின் பின்னால் வெள்ளி பூசியிருக்கிறது. அதனால் வெள்ளி சேர்ந்த உடனே உம்முடைய கண்களுக்கு பிறர் தெரியவில்லை, உம்மைத்தான் தெரிகிறது.

(இந்தக் கதைகள் ஜி. எப் வாலன்ஸ் என்பவர் எழுதியவை)

வி. ஜி. தேசாய்

## வேலை மூலம் கல்வி

1945ஆம் ஆகஸ்ட்மீ 6-ந் தேதி கிறிஸ்தவ நியூஸ் லெட்டர் என்னும் சஞ்சிகை "கல்வி கற்பிப்பதற்கு ஏற்ற ஆற்றல் வாய்ந்த சாதனங்களில் வேலையும் ஒன்றாகும்" என்று எழுதி யிருக்கிறது. இதைத் தான் காந்தியடிகளும் அடிக்கடி கூறி வருகிறார். இந்த விஷயத்தைப்பற்றிச் சிந்திக்கும் பெரியோர்கள் வேலையின் மூலம் கல்வி போதிப்பதே கல்வி போதிப்பதற்குரிய வழிகளில் சிறந்தது என்பதை இப்பொழுது ஒப்புக் கொள்கிறார்கள். ஆயினும் வேலை செய்வதே சிறந்த கல்வி என்பதை வெகு சிலரே ஒப்புக்கொள்வார்கள். இதை நாங்கள் சேவாகிராம மூலாதாரக் கலாசாலையில் 7-வது வகுப்புப் பிள்ளைகளை வைத்துச் சோதித்துப் பார்த்தோம்.

நாங்கள் நூல் நூற்றல், நெசவு செய்தல் என்னும் வேலையையே முதலில் செய்து வந்தோம். மாணவர்கள் தினந்தோறும் 5-மணி நேரம் வேலை செய்தார்கள். 14-வயதுச் சிறுவர்கள் ஒவ்வொருவரும் தினந்தோறும் ஒரு அணா கூலி கிடைக்கக் கூடிய நூல் உற்பத்தி செய்தார்கள். நம்முடைய நாட்டில் சராசரி தினசரி வருமானம் இரண்டொரு அணாக்கள்தானே. அதனால் கிராமங்களில் வேலையில்லாத பருவங்களில் நூல் நூற்றல் நல்ல லாபகரமான தொழிலாகும்.

நாங்கள் செய்த சோதனை பொருளாதார விஷயத்துடன் நிற்கவில்லை. தினந்தோறும் வேலை செய்வதுடன் கல்வி கற்றுக் கொடாததால் அவர்களை வெறும் அடிமைகளாக மட்டுமே செய்து விடுகிறோமோ என்று அஞ்சினோம். ஆனால் கை வேலை செய்யும்பொழுதே அறிவும் அபிவிருத்தியாகிக் கொண்டே வந்தது.

குறித்த காலத்தில் காரியங்களைச் செய்யவும் காலத்தை வீணாக்காமல் இருக்கவும் பயிற்சி அளித்தோம். கடிகாரத்தை முன்னால் வைத்துக்கொண்டே காரியங்கள் செய்து வந்தோம். இந்தப் பயிற்சி மூலம் மாணவர்கள் காலத்தின் அருமையை அறிந்து கொண்டார்கள். இது கிராமவாசிகளுக்கு எவ்வளவு பெரிய கல்வி என்பதை அறிந்து கொள்ள வேண்டும்.

எந்த விஷயத்திலும் கவனம் செலுத்துவதற்கும் பயிற்சி அளித்தோம். பேசிக்கொண் டிருந்தால் வேலை குறைவதையும் கருவிகளைப் பழுது பாராவிட்டால் வேலை கெட்டுப் போவதையும் நிதர்சனமாக அறிந்து கொண்டார்கள்.

எந்தச் சிறு விஷயத்தையும் அலட்சியம் செய்யாமலிருக்கவும் கற்றுக் கொடுத்தோம். "பெரிய விஷயங்களை உருவாக்குவது சிறிய விஷயங்கள்தான்" என்று காந்தியடிகள் அடிக்கடி கூறுவார்.

சேவா கிராமம்— 1.7.46 — தேவ் பிரகாஷ் நய்யார்.

அச்சடித்தவர் பி. அருணாசலம், கமர்ஷியல் பிரின்டிங் அன் பப்ளிஷிங் ஹவுஸ், 46, அரண்மனைக்காரத் தெரு, ஜி. டி., சென்னை.
பிரசுரித்தவர் : சின்ன அண்ணாமலை, தமிழ்ப்பண்ணை, தியாகராயநகர், சென்னை 17.
ஆசிரியர்கள் : பொ. திருகூட சுந்தரம்; நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை